அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைக் கடிதம்: 04/2019

எனது இல : EST-1/ MISCL/ 06/ 0032(I)
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2019.12.27

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் மற்றும்
நியதிச்சட்டச் சபை தலைவர்கள்

**2020 ஆம் ஆண்டு - கடமை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு இணையாக தேசிய மர நடுகைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்**

“ஹெதென ரடட வெடன கஸக்” (முன்னேறும் நாட்டுக்கு வளர்கின்ற மரம்) என்ற விசேட தேசிய மர நடுகைத் திட்டம் - 2020 எனும் தொனிப்பொருளின் கீழ் சுற்றாடல் மற்றும் வனசீவராசி வள அமைச்சின் செயலாளரின் இலக்கம் MMDE/06/FR/06/30 மற்றும் 2019.12.26 ஆந் திகதிய கடிதம் மற்றும் “2020 ஆம் ஆண்டு – கடமை நடவடிக்கைகளை ஆரம்பித்தல்” எனும் தலைப்பில் 2019.12.23 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 38/2019 இன் பால் தங்களது கவனத்தை ஈர்க்கின்றேன்.

02. 2020 சனவரி மாதம் முதலாம் திகதியான புதன்கிழமை கடமைகளைத் துவங்கும் நிகழ்ச்சித்திட்டத்துக்கு இணையாக சுற்றாடல் மற்றும் வனசீவராசி வள அமைச்சின் செயலாளரின் கடிதத்தின் ஆலோசனையின் பேரில் தேசிய, மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் விசேட தேசிய மர நடுகைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு இதனால் அறிவுரை வழங்குகின்றேன்.

03. இந் நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கான தலைமைத்துவ நடவடிக்கைகளை ஏற்று செயற்படுமாறும் தயவுடன் அறியத்தருகின்றேன்.

ஒப்பம்/. எஸ். ஹெட்டியாரச்சி
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

பிரதிகள் : கௌரவ மாகாண ஆளுநர்கள்